Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (2-12-65) இதழ் 293

விசுவாவசு கார்த்திகை 17 ஷஃபான் பிறை 8 வியாழக்கிழமை

## கலட்டி வீதியில் ஒரு கடிதம்!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் தபாற் கந்தோரிலுள்ள தபால் பெட்டியில் இங்கிலாந்திலுள்ள தமது மகளுக்குக் கிடைப்பதற்காக இங்குள்ள ஒருவர் ஒருரூபா முத்திரையொட்டி போட்டகடிதமொன்று அங்கு செல்ல மனமில்லாது யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவீதியில் கிடந்த 'பரிதாப' சம்பவம் பற்றிய செய்தியொன்று நமக்குக் கிடைத்துள்ளது.

சென்ற மாதம் 20-ந் திகதி திரு. வ. நடராசா என்பவர் இங்கிலாந்திலிருக்கும் தமது மகளுக்கு 50 சத முத்திரையும் 25, 15,10 சத முத்திரைகளும் அதாவது ஒருரூபாவுக்கு பெறுமதியான முத்திரைகளை ஒட்டி ஒருவிமானத்தபாலை தமது கையாலேயே யாழ்ப்பாணம் தபாற் கந்தோரிலுள்ள நீல நிறப் பெட்டியில் போட்டாராம். ஆனால் மகளுக்குப்போய்ச் சேர்ந்திருக்குமென அவர் ஆறுதல் கொண்டிருந்தபோது தான் மேற்படி கடிதம் தபாற்தலைகள் (முத்திரைகள்) இல்லாமல் கலட்டியிலுள்ள ஒரு வீதியில் கண்டெடுக்கப் பட்டதாக செய்தி கிடைத்ததாம்.

(6ம் பக்கம் பார்க்க)

# கடும் காற்றுடன் மழை தொடர்ந்து பெய்யும்

## பல இடங்களில் டெலிபோன் சேவை துண்டிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

வடக்கு, கிழக்கு வடமத்திய மாகாணங்களில் இன்று நண்பகல் வரை தொடர்ந்து மழை பெய்யுமென்றும் பலத்த காற்று வீசுமென்றும் கடும் மழை அல்லது சாதாரண மழை பெய்யுமென்றும் கொழும்பு அவதான நிலையம் அறிவித்துள்ளது.

சென்ற மூன்று தினங்களாக இப்பகுதியில் இரவுபகலாக பலத்த மழைபெய்துகொண்டிருக்கிறது. இதனால் டெலிபோன் தகவல் தொடர்புகள் பல இடங்களில் பாதிக்கப்பட்டன. நேற்றுக்காலைவரை யாழ்ப்பாணத்தில் 1,53 அங்குல மழை பெய்ததாகவும் நேற்றுமுன்தினம் 1·78 அங்குல மழை பெய்ததாகவும் யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளகிணறுகள், குளங்கள் ஆகியவைகளில் இப்பொழுது நீர் நிரம்பியுள்ளது. தாழ்ந்த இடங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளது. மேலும் சில தினங்களுக்கு மழை நீடித்தால்இப் பகுதிகளில் சிறு வெள்ளம்

(6-ம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு 220 கோடி பவுன் உதவி

### கம்யூனிஸ்ட்டல்லாத நாடுகளுக்கு அளித்துள்ளன

லண்டன், டிச. 1

1960-ம் ஆண்டிலிருந்து 1963-ம் ஆண்டுவரைகாமன் வெல்த்தின் அபிவிருத்தியடைந்துவரும்நாடுகள்,220 கோடி பவுன் கம்யூனிஸ்டல்லாத நாடுகளிடமிருந்து உதவியாகப் பெற்றிருக்கின்றன என அறிவிக்கப்படுகிறது.

இதில் அமெரிக்கா அளித்த உதவி 63 சத விகிதமாகும் பிரதானமாக ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, இந்தியா, நியூஸிலந்து ஆகிய நாடுகள் இதில் 70 கோடிக்கு மேற்பட்ட பவுண்களை அளித்திருக்கின்றன.

எல்லா காமன்வெல்த் நாடுகளும் மொத்தமாகப் பெற்றதைவிட அதிக உதவியை இந்தியாதான் பெற்றுள்ளது, 55 சதவிகிதத்தை அது பெற்றிருக்கிறது.

பிரிட்டன் 19 கோடி பவுனும் கனடா 470 லட்சம் பவுனும், ஆஸ்திரேலியா 380 லட்சம் பவுனும், நியூஸிலந்து 40 லட்சம் பவுனும் அளித்திருக்கின்றன.

(பி. டி. ஐ.)

## தபால் அதிபரின் யோசனையை வவனியா ஊழியர் நிராகரித்தனர்

### வேலைநிறுத்தம் நீடிக்கிறது

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த தபால் சேவகர்களின் வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படியும், கைவிட்டதற்குப் பிறகு அவர்கள் கோரிக்கைகள் குறித்து தாம் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு தயாராக இருப்பதாக போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் விடுத்த வேண்டுகோளை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் மறுத்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் நடந்துகொண்டிருக்கும் போதே பேச்சுவார்த்தை நடத்தலாமென்றும், பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஏற்படும் சமரசத்தைப் பொறுத்தே வேலைநிறுத்தத்தைக்கைவிடலாமென்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அகில இலங்கை தபால், தந்தி ஊழியர் சங்கத்தின் வவனியாக் கிளையினர் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு அறிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு ஆரம்பமான இவ்வேலைநிறுத்தத்தில் வவனியா தபால்கந்தோர் உட்பட வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த 14 உபதபாற்கந்தோர்களின் தபால் சேவகர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

சென்ற மூன்று வருடகாலமாக தாம் சமர்ப்பித்துவந்த கோரிக்கைகளுக்கு எதுவிதமான பலனும் கிடைக்காத காரணத்தினாலேயே இவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1959-ம் ஆண்டு தொடக்கம் வேலைசெய்யும் தபால் சேவகர்கள் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை யென்பதும், போதியளவு தபால் சேவகர்கள் நியமிக்கப்படவேண்டுமென்பதும், வவனியா தபால்நிலையத்துக்கு சைக்கிள் நிற்பாட்டுவதற்கு ஒரு 'செட்' வேண்டுமென்பதும், மாங்குளம் தபால் நிலையத்துக்கு புகையிரத நிலையத்தில் தபால் ஏற்றுவதற்கு ஒரு வண்டி வேண்டுமென்பதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தபால் சேவகர்களின் நான்கு அம்சக் கோரிக்கைகளாகும்.

நேற்றுப் பிற்கல் நடைபெற்ற வவனியாக்கிளை தபால், தந்தி ஊழியர்சங்க அவசரக் கூட்டத்தில் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

வேலைநிறுத்தத்தில் தாய் சங்கம் உட்பட இலங்கையிலுள்ள ஏனைய சங்களையும் அனுதாபவேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதென்றும் ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் நாலு மணியிலிருந்து 24 மணித்தியாலயத்திற்குள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வேலைக்குத் திரும்பாவிட்டால் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று வடபகுதி தபால் அதிபர் எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறலாமென்றும், வேலைநிறுத்தம் மற்றைய மாவட்டங்களுக்கும் பரவக்கூடிய அறிகுறிகள் காணப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

## மட்டக்களப்பில் 'பதுக்கல் வேட்டை'

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பில் நடைபெற்ற 'பதுக்கல் வேட்டை'யில் பல்வேறு வர்த்தகஸ்தாபனங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. சாமுவேல், உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, பொலிஸ் பகுதியினர் ஆகியோர் கொண்ட கோஷ்டி இங்கு 'பதுக்கல் வேட்டை'யில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

## பெரும் விமான எதிர்ப்பு தளம்

வாஷிங்டன், டிச. 1

கொளராடோ ஸ்பிரிங்ஸில் பெரும் விமான எதிர்ப்புத் தளம் ஒன்றை அமெரிக்காவும் கனடாவும் கூட்டாக அமைத்துவருகின்றன. நூற்றுக்கணக்கான மீட்டர் பூமிக்கடியில் நிர்மானிக்கப்பட்டுள்ளஇத் தளம் ஜனவரியில் உபயோகத்திற்கு வரும். 1000 சூப்பர் ஸானிக் ஜெட் போர்விமானங்களும், எண்ணிக்கையில் அடங்காத ராக்கெட்டுகளும் இங்கிருக்கும். நோராட் எனப் பெயர் கொண்ட இத் தளம் மேற்கு உலகிலேயே மிகப் பெரியதாகும்.

## "தண்டிக்கப்படும் வியாபாரிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்க"

யாழ்ப்பாணம், வியாழன்

கட்டுப்பாட்டு விலைகளுக்கு மேலதிகமாக விற்கும் வியாபாரிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அவர்களின் லைசென்சுகளை ரத்துச் செய்வதுடன் அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக சங்கானைப் பட்டினசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பட்டினசபைத் தலைவர் திரு. க. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மற்றும் சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பட்டினசபை எல்லைக்குள் வசிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்படவேண்டும். அரசாங்க இலாகாக்களுக்கு சட்ட ஆலோசனை அட்டோர்னி ஜெனரலுக்குக் கொடுக்கப்படுவதுபோல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அட்டோர்னி ஜெனரல் ஆலோசனை கொடுக்கவேண்டுமென்றும், தனியார்துறை மூலம் நடாத்தப்படும் ஆஸ்பத்திரிகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் வேண்டிய சட்டங்களைத் தயாரிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அண்மையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பொலிஸ் கமிஷனை வரவேற்று பொதுச் சேவைக் கமிஷன், சட்டசபைக் கமிஷன், ஸ்தலஸ்தாபன கமிஷன் போன்று நிரந்தரமான முறையில் ஒரு பொலிஸ் கமிஷன் இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்களை திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் கொண்டுவந்தார்.

ஈழநாடு'

## 'சூருவளி மாத உதவித்திட்டம்

யாழ்ப்பாணம், வியா.

தெமட்டக்கொடையைச் சேர்ந்த ஓரன்பர் ஈழநாடு சூருவளி கஷ்ட நிவாரண மாத உதவித் திட்டத்தின் கீழ் நவம்பர் மாதத்திற்குரிய தமது உதவிப்பணமான 25 ரூபாவை அனுப்பியுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த ஓரன்பர் மார்கழி மாதத்திற்குரிய தமது உதவிப்பணமான 25 ரூபாவை அனுப்பியுள்ளார்.

## மல்லி ருத்தல் 80 சதமா?

துணுக்காய், புதன்

இப்பகுதி கூட்டுறவுச்சங்கங்களில் கட்டுப்பொருட்களான புளி, மல்லி, தீப்பெட்டி, மண்எண்ணை முதலிய உணவுப்பொருட்கள் வாங்கமுடியாமலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட கடைகளில் 1 ருத்தல் மல்லி 80 சதமாகவும், ஒரு ருத்தல் புளி ஒரு ரூபா 50 சதமாகவும் விற்பப்படுகின்றனவாம்.

## திசை திருப்பினர்

வாஷிங்டன், டிச. 1

அமெரிக்க வான்வெளிக் கிரகம் ஒன்றை 10 மாதங்களுக்குப் பின் விஞ்ஞானிகள் திசை திருப்பிவிட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

உலக வாழ்க்கையில் பல ஏமாற்றங்களும் எதிர்ப்புகளும் எப்போதும் இருக்கவேசெய்யும். இவை அனைத்தையும் மனங்கலங்காமல் அமைதியாக ஏற்று நின்று இவை எல்லாம் தெய்வத்தின் திருவிளையாடல் என்று இருப்பவரே வீரராவார்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

[illegible] கார்த்திகை மீ 17 உ (2-12-65)


## மீண்டும் வாகுப்புவாதம்

"நாம் சிங்களவர் முன்னணி" என ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தம்பதெனியா எம். பி. யும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவருமான திரு. ஆர். ஜி. சேனநாயக்கா தலைமை தாங்குகிறார். சிங்கள மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுப்பதும் நாடு பிரிக்கப்படுவதை எதிர்ப்பதும் இந்தமுன்னணியின் முக்கிய குறிக்கோள்களாம். இந்த முன்னணி பற்றிய செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து பிரதமர் டட்லி சேனநாயகா விடுத்துள்ள ஒரு செய்தியில் பெரும்பான்மைச் சமூகத்தவரின் உரிமை சிறுபான்மைச் சமூகத்தவருக்கு வழங்கிவிட்டதாகச் செய்யப்படும் பொய்ப்பிரசாரங்களுக்கு மக்கள் செவிசாய்க்கக் கூடாதென்று தெரிவித்துள்ளதுடன் இப்பிரசாரங்களின் நோக்கங்கள் பற்றியும் தமது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலும் மற்றும் பல ஸ்தலஸ்தாபனங்களின் தேர்தல்களும் நடைபெறவிருக்கும் இச்சமயத்தில் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் தங்கள் அபேட்சகர்களின் வெற்றிக்காகப் பிரசாரத்திலீடுபட்டிருக்கின்றன. தேர்தல் சமயத்தில்இங்கு வகுப்புவாதப் பிரசாரங்கள் ஆரம்பமாவது புதிதல்ல. இன்று தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும்கூட முன்னர் இதே முறையைக் கையாண்டிருக்கின்றன. பண்டாரநாயக்கா--செல்வநாயகம் ஒப்பந்தத்தைக் கண்டித்து, கண்டிக்குப் பாதயாத்திரை நடைபெற்றதும் நாடெங்கும் எதிர்ப்பு இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் மறந்துவிடக்கூடிய விஷயங்களல்ல. இப்பொழுது 'டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம்' என்று (அப்படி ஒன்று இல்லை எனப் பிரதமர் மறுத்தும்கூட) ஒன்றைக் குறிப்பிட்டு ஆர். ஜி. சேனநாயகாவும் மற்றையோரும் எதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பித்திருக்கின்றனர்.

பண்டா--செல்வா எதிர்ப்பு இயக்கங்களினாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவங்களினாலும் 1958-ம் ஆண்டில் ஏற்பட்ட துரதிர்ஷ்டமான வகுப்புக் கலவரங்களினாலும் ஐக்கியதேசியக் கட்சியினரும் இன்று அதனுடன் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளவர்களும் மனம்மாறி, நாட்டின் ஐக்கியத்துக்கு உழைக்க முன்வந்திருக்கிறார்களென நம்பலாம். ஆனால் தேர்தலில் ஏற்படும் தோல்வியைத் தொடர்ந்து மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு வகுப்புத் துவேஷப் பிரசாரமும் வகுப்புவாதத்தைக் கிளப்பி விடுவதும்தான் ஒரே வழியென்ற தவறான அபிப்பிராயம் நமது நாட்டில் சில அரசியல்வாதிகளிடம் குடிகொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் அனுபவரீதியாகப் பெற்ற படிப்பினைகளைக்கூட இந்த அரசியல்வாதிகள் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. தேசிய ஐக்கியத்துக்காக வாழ்ந்த ஒரு பெருமகனுக்குப் பிள்ளையாகப் பிறந்தும் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடுவதால் முன்னேறமுடியாதென்பதை தமது கடந்தகால அரசியல் வாழ்வில் அறிந்தும்கூட ஆர். ஜி. சேனநாயக்கா இன்னும் வகுப்புவாதக் குட்டையிலேயே விழுகிறார். இலங்கையின் பிரதமமந்திரியாகப் பதவிவகித்து, இந்நாட்டு மக்களுக்கிடையில் பாகுபாடு காட்டப்படமாட்டாது என தமது ஆட்சிக்காலத்தில் பலதடவைகள் 'உறுதிமொழி' கூறிவந்த திருமதி சிறிமா பண்டாரநாயகா கூட தமது கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான ஆர். ஜி. சேனநாயகாவின் வகுப்புவாத இயக்கங்களை அனுமதிப்பதும் உடந்தையாக இருப்பதும் வேதனை அளிப்பதாகும். இவர்களுடன் கூட்டுச்சேர்ந்து 'பலமான' எதிர்க்கட்சிஅமைத்துள்ளவர்களும் இந்த வகுப்புவாத இயக்கங்களுக்கு ஆதரவளிப்பது வெட்கக்கேடு.

வகுப்புவாதப்பிரசாரங்களும், இயக்கங்களும், அவற்றிக்குஎதிர்ப்புஇயக்கங்களும் வேறுபட்ட நோக்கங்களையுடையவையாக இருக்கலாம். நோக்கம் இருப்பினும் தேர்தல் முடிந்து எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த அரசாங்கம்நாட்டைமுன்னேறுவதற்காக எடுக்கும் எந்த நடவடிக்கையையும் ஆதரித்து அது சரியானவழியில் செல்வதற்கு உதவி புரியவேண்டியது தான் எதிர்க்கட்சியின் கடமையாக இருக்கவேண்டும், ஆட்சிக்கு வந்தபின் ஒரு சமூகத்தவருக்கோ, ஓர் இனத்தவருக்கோ உரிமைகளும் சலுகைகளும் வழங்குவதற்கு அரசாங்கம்முயற்சி செய்வதும், ஒருசமூகத்துக்கும் இனத்துக்கும்தான் உரிமைகளும் சலுகைகளும் வழங்கவேண்டுமென எதிர்க் கட்சியினர் வற்புறுத்துவதும் ஜனநாயக தர்மமாகாது. நாட்டின் முன்னேற்றத்துக்கும், நாட்டுமக்களின் அமைதியான நல்வாழ்வுக்கும் உதவியாகவும் தூண்டுகோலாகவும் இருப்பதற்குத்தான் ஜனநாயக ஆட்சியில் பலம் வாய்ந்த எதிரிக்கட்சிஅவசியமேயொழிய வகுப்புவாதமுறையில் ஒருகுறிப்பிட்ட சமூகத்தவருக்கு உரிமை வழங்கவேண்டுமென்றும் மற்றொரு சமூகத்துக்கு உரிமை வழங்கக்கூடாதென்று மறுப்பதற்கும் எதிர்க்க[illegible] வேண்டியதல்ல.

தேர்தல்களைக் காரணமாகக் கொண்டு வகுப்புவாத இயக்கங்கள் ஆரம்பிக்கப்படுவதை முளையிலேயே கிள்ளியெறிய இந்நாட்டின் தேசாபிமானிகளின் உதவியுடன் அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். வகுப்புவாத இயக்கங்களுக்கு எதிரான போட்டி இயக்கங்களை ஆரம்பிக்க அனுமதிப்பதும், வகுப்புத்துவேஷங்களுக்கெதிராக அறிக்கைகள் விட்டுக்கொண்டிருப்பதும் நாட்டின் வளர்ச்சிக்கு நல்லதல்ல. நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு முக்கிய பிரச்னைகளுக்கு எதிர்க்கட்சியினரும்அரசாங்கமும்சேர்ந்து சுமுகமான, நிரந்தரமான தீர்வு ஒன்றிற்கு வழி காணவேண்டும். பிரச்னைகளை வளர்த்துக்கொண்டு வகுப்பு வாதத்தைக் கிளப்பி முன்னேறலாமென்ற நினைவுக்கு சிறிதளவாகிலும் இடமளிக்க[illegible]

# "சமரச உணர்வினால் துன்பங்கள் நீங்கும்"

## வள்ளலார் நூற்றாண்டுவிழாவில் பேராசிரியர் தெ. பொ. மீ. கருத்து

வெள்ளவத்தை, புதன்

"ஆயிரம் ஆண்டுகளாக மனித சமுதாயம் சாதி, மொழி, மதம், கடவுள் ஆகியவற்றின் பெயரால் ஏமாற்றப்பட்டு வந்ததை எண்ணிக் கொதித்து உலகம்போட்டியில் பொறாமையில் இருக்கிறதே எனக் கரைந்து உருகிப் புலம்பிப் பாடியவரே இராமலிங்க சுவாமிகள். உலகம் ஒருமைப்பாட்டை நோக்கி விரையும் வேளையில், பிறர் தமிழரைத் தூற்ற முன்பு அவரின் பாடசாலைகளை ஆங்கிலத்தில்மொழி பெயர்த்து உலகமே போற்றச் செய்ய வேண்டும் அவரை சைவர் என்றோ வைணவர் என்றோ கொள்ளலாம் ஆனால் அவ்வாறுகூறி ஒரு சிறுகூட்டத்திற்குள்அவரை அடக்குவது தவறானதாகும்." இவ்வாறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இராமலிங்க வள்ளலாரின் நூற்றாண்டுவிழாவில் சொற்பொழிவாற்றுகையில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டார்.

திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமை வகித்துப் பேசுகையில், கற்றதன் பயனால் செந்தண்மை பூண்ட பண்பைக் கொண்டு உலகத் தொண்டு செய்யும் பேராசிரியர் அவர்கள் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான கலைத்தொடர்பை மேலும் ஊக்கிவிடவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

'சமயமஞ்சரி' இதழில் ஆசிரியர் திரு. ஆ. இராமச்சந்திரா பேசுகையில், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" என்னும் அடிப்படையில் கம்பன், சேக்கிழார், பாரதி, சுத்தானந்தபாரதி ஆகியோர் கூறியதெல்லாம் இன்று ஏட்டுச் சுரைக்காயாகப் போய்விட்டது" என்று கூறினார்.

பேராசிரியர் திரு. மீனாட்சி சுந்தரனார் மேலும் குறிப்பிட்டதாவது:

"இராமலிங்க சுவாமிகள் வேறு மொழியில் பாடியிருந்தால் அதனை உலகமே கொண்டாடியிருக்கும். ரஷ்யாவின் பைபிளாகவும் அது இருந்திருக்கும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதைப் போல வள்ளுவர் குறளையும் மேடையிலேதான் முழங்குகின்றோம். பத்து பதினைந்து உரைக்காக வள்ளுவர் குறளை எழுதவில்லை. வாழ வேண்டும் ன்ற எண்ணத்தில் உலகம் உய்ய எழுதினார். "அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்று இனி வருங்காலத்தில் வரக்கூடிய நல்லவர்க்கும் அடியேன் என்று சுந்தரர் பாடுகின்றார். பட்டினத்தாரோ 'முடிசார்ந்த மன்னரும் பிடிசாம்பலாவர்' என்ற உண்மையை உணர்த்துகிறது இவ்வாறே சமத்துவத்தைக் கூறும் சேக்கிழாரின் பெரியபுராணம் சைவர்க்கு மட்டும் உரியதல்ல. உலகெலாம் வாழ்ந்தால்தான் தமிழும் தமிழனும் வாழ்வான் என்பதை உணர்ந்தவர் அவர். தமிழிலே அதைப் பாடியதால் அது தமிழனுடைய சொத்தல்ல. தாயுமானவரும் இவ்வாறே பாடுகின்றார். சமரச சன்மார்க்கமென்பது உபநிடத காலத்திலிருந்தே வருகின்றது.

சமரச தாயன்பு என்றுமே அழியாததினால்தான்அதற்கு முருகு என்னும் வழங்கி பஞ்ச புலன்களுக்கும் இன்பத்தைத் தருகின்றது.'

கிறிஸ்தவர், சைவர், வைணவர், இஸ்லாமியர் அனைவரும் தங்கள் தங்கள் மதம்தான் பெரியது மற்றையவர்கள் நரகத்தில் படு பாதாளத்தில் போவர் என்று கூறுகின்றார்கள். தத்தம் சமத்தவர்க்கே, இனத்தவர்க்கேநாட்டவர்க்கே உத்தியோகம் வழங்குகின்றனர். இவற்றையெல்லாம் கடந்ததே சமரசசன்மார்க்கம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்ற நினைவில் சமரசம் உண்டாகின்றது.

சிவன்தான் அன்றேல் அல்லாதான் கடவுள். மற்றவர் நரகம் போவர் என்று எண்ணவேண்டாம். சிலுவையில் தன்னை அறைபவர்களையே மன்னிக்கும்படி வேண்டியவர்தான் யேசுநாதர். புத்தபிரானும் அன்பே உருவாகி எல்லோரும் வாழ வேண்டி போதித்தவர்.

தன்னலமற்ற நெகிழ்ச்சிதான் கடவுள். அன்பே வடிவான இறைவனுக்கு அன்பையே செலுத்தவேண்டும்,

'உலகத்து சீவராசிகள் அனைவரிடமும் ஆண்டவன் இருக்கின்றான் என்று எண்'ணினால் பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி, ஆங்கிலேயன், கறுப்பன், உயர்ந்தசாதி, தாழ்ந்த சாதி போன்ற மாறாட்டமே இருக்காது. இவ்வேறுபாடுகள் வேண்டாமென்பதற்காகவே வள்ளலார் பாடினார். சமரச உணர்வினால் தான் உலகைப் பீடித்துள்ள பேய்கள் மறைந்து. துன்பங்கள் நீங்கும்.

## ஆண்டவனும் மின்சாரமும்

யாழ்ப்பாணம், வியா,

"வானொலிப் பெட்டிகளைத்தவிர வேறெந்தப் பெட்டிகளுக்குமே பாடக்கூடிய சக்தி இல்லாதது போல, எல்லாமனிதர்களுக்கும் இறைவனைக்காணக் கூடிய சந்தர்ப்பம் கிடையாது"

யாழ். கிளைதிவ்ய ஜீவனசங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் டியூட்டோரியன் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் யோகி சச்சிதானந்தா பேசுகையில் குறிப்பிட்டார்.

"எப்படி மின்சாரம் எங்கும் வியாபித்து வெளிச்சமாகவும், சமையல் செய்யும் அடுப்பாகவும் இருக்கிறதோ அதேபோல் தான் ஆண்டவனும்" என்றும் யோகிசச்சிதானந்தா சொன்னார்.

# ஐயாறன் எழுதுவது

நேற்று யாழ்ப்பாணம் சாராயக் குதத்தின் முன்பு நீண்ட 'க்யூ' வரிசையிலே நூற்றுக் கணக்கானவர்கள் மணிக்கணக்காக நின்றுகொண்டிருந்தார்களாம். ஆஸ்பத்திரி ரோடுவரையில் 'க்யூ' நீண்டிருந்ததாயும் முதல் திகதியன்று நல்ல சாராயம் வாங்கலாமென்றே அவர்கள் தவம் கிடந்ததாயும் ஓர் அன்பர் வந்து சொல்லிவருந்தினார். இங்கு மது அரக்கனின் பிடியில் மக்கள் எவ்வளவு சிக்கியுள்ளனரென்பதற்கு இது ஒரு கண்கண்ட அத்தாட்சியாகும்.

மதுபானம் அருந்திவிட்டு பஸ்நிலையத்திலும் பஸ்ஸிலும் சிலர் தகாத முறையில் நடப்பதாயும், பெண்கள் பஸ்ஸில் தனியாகச் செல்லுவதும் பத்திரமற்றிருப்பதாயும், மதுபானத்தால் இப்பகுதிகளில் குற்றங்கள் அதிகரித்து மக்கள் நிம்மதியாக வாழமுடியாமலுள்ளதாகவும் தினசரி பல பல கேள்விப்படுகிறோம்.

குடி மயக்கத்தில் தகாத முறையில் நடந்தவர்களை அடித்து பொலிசில் அடைத்து, பின்னர் விடுதலை செய்ததாயும், பஸ் சிப்பந்திகளிலும் சிலர் இக் கூடாத பழக்கம் கொண்டிருப்பதாயும் ஓர் அன்பர் வந்து சொன்னார் இது உண்மையாயின் மிக ஆபத்தாகும். பிரயாணிகளின் உயிர் பஸ் சிப்பந்திகளின் கையில்தான் பெரிதும் உள்ளதல்லவா?

ஃ ஃ ஃ

பூரண மதுவிலக்கை இலங்கையிலே அமுலுக்குக் கொண்டுவரப் போவதாக உள்நாட்டு மந்திரி தகநாயகா அறிவித்ததை ஓர் தமிழன்பர் பாராட்டி அவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளாராம். இந்நாட்டில் வசிக்கும்பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் குடிக்கப்படாதென்று அவர்களது சமயங்களே தடுக்கின்றன. ஆகவே இங்கு மதுவிலக்கை அமுல் செய்வதில் அதிக சங்கடமிருக்கத் தேவையில்லை என்றும், மதுவிலக்கு வந்தால், இந்நாட்டுக்குத் தேவையான வெள்ளைச் சீனியை வடமாகாணத்தில் பதனீரிலிருந்தே உற்பத்தி செய்து கொடுத்து வருடத்தில் 15 கோடி ரூபாய் சீனிக்காக வெளியேறாமல் தடுக்கலாமென்றும், இந்த உணவுப் பொருளுக்குப் பிறர் கையை எதிர்பார்க்காமல் சுயதேவைப் பூர்த்திசெய்து கொள்ளலாமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பனங்கள்ளுக்கு அதிக விலை கிடைப்பதால் பதநீருக்குப்பதிலாக கள்ளையே இறக்குவதாயும், மதுவிலக்கு அமுலுக்குவரின், பதநீரைக் கொண்டு நியாயமான விலைக்கு சீனியை உற்பத்தி செய்ய முடியுமென்றும், இந்தப் பணியை மந்திரி செய்ய முடியுமாயின் எதிர்கால சந்ததியினருக்கு அது பெரிய சேவையாகுமென்றும், இதற்காக கடவுளின் அருள் அவருக்குக் கிடைக்குமென்றும் ஆசிகூறியுள்ளார்.,

இந்தப் பெரும் சீர்திருத்தத்தைக் கொண்டுவரும் துணிச்சல் மந்திரிக்கு உண்டா? இதை இங்கு வெற்றிகரமாக அமுல் நடத்த முடியுமா? எப்போது?

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாம்பியா - பிரிட்டன் கருத்துவேற்றுமை

## துருப்புக்களை அனுப்பும் நிபந்தனை ஜனதிபதி கவுண்டா ஏற்கவில்லை

### முட்டுக்கட்டையை அகற்ற மந்திரி பொட்டம்லி விரைகிருர்

லண்டன், டிச. 1

**துருப்புக்களை அனுப்புவது குறித்து ஸாம்பியா அதிபர் கவுண்டாவுக்கும், பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. மால்கம் மக்டொனல்டுக்குமிடையே முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது.**

**இதைத் தீர்க்கும் பொருட்டு பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பொட்டம்லி லுஸாக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிருர்.**

ஸொம்பியா—ரொடீஷிய எல்லையில் ஸம்பேஸி ஆற்றிலுள்ள கரீபா அணைக்கட்டை பாதுகாக்க பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்பும்படி அதிபர் கவுண்டாகோரி இருந்தார். ஸாம்பியாவில் செம்புச் சுரங்கத்துக்கான மின்சாரத்தை இந்த அணைதான் சப்ளை செய்கிறது. இந்தக் கோரிக்கையை ஆராய்ந்த பிரிட்டன், ஆயுதமில்லாத வேவு விமானங்களையும், சிறிய எண்ணிக்கைகொண்ட ராணுவத்தையும் அனுப்புவதாக கூறியிருக்கிறது.

ஆனுல் இத்துருப்புக்கள் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிலேயே இருக்குமென்றும், அவைகள் இருக்கும்வரை வேறுதுருப்புக்களை ஸாம்பியாவில் பிரவேசிக்க அனுமதிக்க முடியாது என்றும், எக்காரணம் கொண்டும் தென் ரொடீஷிய எல்லையைக் கடக்கமுடியாது என்றும் பிரிட்டன் நிபந்தனை விதித்திருக்கிறது.

இந்த நிபந்தனை காரணமாகபிரிட்டனுக்கும் ஸாம்பியாவுக்கும் மிடையே அபிப்பிராய பேதமும் முட்டுக்கட்டையும் ஏற்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் துருப்புக்கள் ஸாம்பியாவுக்கு அனுப்பப்படுவது நல்லதுதான் என்றும், இதனுல் எல்லையில் கிளர்ச்சிகள் எதுவும் இருக்காது என்றும் ரொடீஷிய கலகத் தலைவர் இயான் ஸ்மித் அறிவித்தார். ஆனுல் ரொடீஷியாவின் எல்லையை மீற எத்துருப்புக்களும் அனுமதிக்கப்பட மாட்டா என்றும் அவர் கூறினுர்.

பிரிட்டிஷ் பிரதமர் வில்சனின் அறிக்கையை நேற்று பார்லிமெண்ட் எம். பி. க்கள் எதிர்பார்த்தனர். ஆனுல் அந்த அறிக்கை இன்று வெளியிடப்படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

## 'வியட்னமில் அமெரிக்கா தோற்பது நிச்சயம்'

### சீன, வடவியட்னம் தலைவர்கள் நம்பிக்கை

ஹாங்காங், டிச. 1

வியட்னம் யுத்தத்தில் தாங்கள் வெற்றிபெறுவதில் சீன, வடவியட்னும் தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்கள் என்றும், இதன் காரணமாக எந்த சமாதான முயற்சியையும் நிராகரிப்பார்கள் என்றும் சீன செய்தி ஸ்தாபனம் கூறியது.

வடவியட்னும் பொருளாதாரத் தூதுகோஷ்டி ஒன்றுக்கு அளித்த விருந்தில் சீன உதவிப் பிரதமர்களில் ஒருவரான திரு. ஹ்சீ பூ-சீ பேசுகையில் வியட்னுமில் அமெரிக்கா அதன் இறுதி அழிவில் இருக்கிறது எனக் கூறினுர்.

அமெரிக்கா தனது தோல்வியை மறைப்பதற்காக தென்வியட்னுமுக்கு அதிகத் துருப்புகளை அனுப்புகிறது என்றும், வடவியட்னும்மீது குண்டுவீச்சை அதிகரித்து வருகிறதென்றும் அதேசமயம் சமாதானம் பேச வருகிறதென்றும் அவர் கூறினுர்.

''ஆனுல் அமெரிக்கா என்னதான் கரணம் அடித்தாலும், சதி செய்தாலும் வியட்னும் மக்களின் உறுதிக்குமுன் அவர்கள்தோல்வியுறுவது நிச்சயம்'' என்றும் அவர் கூறினுர்.

வடவியட்னும் உதவிப்பிரதமர்களில் ஒருவரகன திரு. லீதான்கி பேசுகையில் 'எல்லாக் கஷ்டங்களையும் சமாளித்தும், எல்லாத் தியாகங்களையும் புரிந்தும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீது நாம் பூரண வெற்றி பெறுவோம். எங்கள் தந்தையர் நாட்டை மீண்டும் ஒன்றுபடுத்துவோம்'' என்ருர்.

இதேசமயம் வடவியட்னும் வெளிநாட்டமைச்சு அதிகாரியொருவர் விடுத்த அறிக்கையில் வியட்னும் யுத்தத்தில் பூரண வெற்றி பெறும் நம்பிக்கையை தெரிவித்தார். பி. டி. ஸி.

### வங்கியை எங்கே நிறுவுவது

மணிலா, டிச. 1

இங்கு நடைபெறும் ஆசிய பொருளாதார ஒத்துழைப்புச் சம்பந்தமான மந்திரிகளின் மகாநாடு, உத்தேச அபிவிருத்தி வங்கியை எங்கு நிறுவுவதென்ற விஷயத்தில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

இலங்கை தனது நாட்டில் நிறுவவேண்டும் என்ற கோரிக்கையை முதலில் வாபஸ் பெற்றது. ஆனுல் மற்ற நாடுகள் அப்படிச் செய்யாததால், இலங்கை மீண்டும் தாம் போட்டியிடப்போவதாய்க் கூறியது.

மணிலா, டோக்கியோ, ஈரான், பேங்காக், கோலாலம்பூர் ஆகியனவே போட்டியிலுள்ள பிரதான இடங்களாகும். (பி. டி. ஸி.)

### பூட்டோ

புதுடில்லி, டிச. 1

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ ருமேனிய ஜனுபதி, வெளிநாட்டு மந்திரி ஆகியோருடன் நேற்றுப்பேச்சு நடத்தினுர்.

### அமெரிக்கா பேச்சு நடத்தும்

வாஷிங்டன், டிச. 1

ஐக்கிய அராபியக் குடியரசுக்கு உணவுப் பொருள் சப்ளை பற்றி அமெரிக்கா பேச்சு நடத்தவிக்ருகிறது.

### 'நானே வீரன்'

நியுயோர்க், டிச. 1

'சண்டையில் என்னைத் தோற்கடிக்க இந்தப் பூமியில் எவருமில்லை. இனி நான் செவ்வாக்கிரகத்திற்குத்தான்செல்லவேண்டும்' என காஸியஸ் கிளே 500 விருந்தினர்கள் மத்தியில் கூறினுர். 'அமெரிக்கப் பையன்'களுக்கு ஒரு ஆதர்ச நாயகனுக விளங்கும் அடையாளத்துக்காக அவருக்கு குத்துச்சண்டை சங்கம் விருந்து ஒன்றை வழங்கியது. (பி.டி.ஸி.)

### சீனுவுக்கு இந்தியா ஆட்சேபனை

புதுடில்லி, டிச. 1

பொய்யான எதிர்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதினுல் உண்மையை மறைக்கமுடியாதென்றும், சீனுவின் ஊடுருவலைமறைப்பதற்கேபொய்யான எதிர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன என்றும் இந்தியா சீனுவுக்கு அனுப்பியுள்ள ஆட்சேபனைக் குறிப்பு கூறுகிறது.

சிக்கிம்—சீன எல்லையை 1959-ம் ஆண்டு சீனு தெளிவாக ஒப்புக்கொண்டபின், அதில் ஊடுருவல் செய்வதற்கு நெருக்கடியையும், குழப்பத்தையும் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும் என்பதே நோக்கம் என்றும் ஆட்சேபனைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

### பாகிஸ்தான் புகார்

நியுயோர்க், டிச. 1

பாகிஸ்தானுக்கு தண்ணீர் சப்ளையை 3 கிழக்கு நாடுகளில் இந்தியா துண்டித்துவிட்டதென்றும், ஒப்பந்தப்படி சப்ளை செய்ய வேண்டிய தண்ணீர் விடப்படவில்லை என்றும் பாகிஸ்தான் பாதுகாப்புசபைக்கு புகார்செய்திருக்கிறது. இதனுல் மேற்கு பாகிஸ்தானில் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும் அது கூறியுள்ளது.

பாதுகாப்புசபைத் தலைவருக்கு நிரந்தரப்பிரதிநிதி திரு, சையத் அம்ஜத் அலி எழுதியுள்ள கடிதத்தில் இதைத் தெரிவித்திருக்கிருர். காஷ்மீரில் இந்தியா அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறதென்றும் வழக்கம்போல் அவர் கூறியிருக்கிருர்.

### பாக். சிப்பந்திகள் புறப்பாடு

புதுடில்லி, டிச. 1

டில்லியிலுள்ள 400 பாகிஸ்தான் ஹைகமிஷன் சிப்பந்திகளும், அவர்களின் குடும்பத்தினரும் இன்று ஈரான் விமானங்களில் லாகூருக்குப் புறப்பட்டனர்.

சாஸ்திரிக்கு ரஷ்யப்பிரதமர் கடிதம்

## மாதக் கடைசியில் சந்திக்கலாமே?

புதுடில்லி, டிச. 1

இம்மாதக் கடைசியில் அல்லது அடுத்தமாத ஆரம்பத்தில் டாஷ்கண்டில் அயூபும், சாஸ்திரியும் சந்தித்துப் பேசலாம் என ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் தெரிவித்திருக்கிருர்.

இந்த யோசனைகளடங்கிய கடிதம் ஒன்றை திரு. கோஸிஜின் சாஸ்திரிக்கு அனுப்பியிருக்கிருர். இதுபற்றி திரு. சாஸ்திரி தன் சகாக்களுடன் கலந்தாலோசித்து வருகிருர் எனத் தெரிகிறது.

இந்தியப் பிரதமர், அமெரிக்கா சென்று ஜனுதிபதி ஜோன்ஸனைச் சந்தித்த பின்பே ரஷ்யா செல்ல முடியும் என முன்பு கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## தெற்கே 9 வடவியட்னும் படைகள் சண்டையிடுகின்றன

### அமெரிக்க குண்டுவீச்சு அதிகரிக்கும் என்கிருர் மக்னமாரா

சைகோன், டிச. 1

தென்வியட்னுமில் கொரில்லாக்களுக்கு ஆதரவாக 9 வியட்னும் படைப் பிரிவுகள் சண்டையிட்டு வருகின்றன என அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா கூறினுர்.

வடவியட்னுமியர் மூன்று திக்குகளிலிருந்து தெற்கே ஊடுருவல் செய்வதாயும் அவர் கூறினுர்.

தென்வியட்னுமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை 3 லட்சமாகஉயர்த்தப்படும் என்ற கருத்து பற்றி கேட்கப்பட்டதற்கு, திரு. மக்னமாரா பதிலளிக்க மறுத்துவிட்டார். ஆனுல் வடவியட்னும்மீது அமெரிக்க குண்டுவீச்சு மேலும் தீவிரப்படுத்தப்படும் என்ருர் பாதுகாப்புமந்திரி திரு. மக்னமாரா.

நேற்று ஒரு சண்டையில் 100 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது. கம்போடியா எல்லைக்கருகே இச்சண்டைகள் நடைபெற்றது.

### சீனு ஆட்சேபம்

ஜாகர்த்தா, டிச. 1

இந்தோனேஷியாவில் சீனப் பிரஜைகள் கொடுமைப்படுத்தப்படுவதை உடனடியாக நிறுத்தும்படியும், குற்றவாளிகளைத் தண்டிக்கும்படியும் சீனு மற்ருேர் ஆட்சேபனைக் குறிப்பு ஒன்றை அனுப்பியிருக்கிறது.

சிறை வைக்கப்பட்டிருக்கும் சீனர்களையும், அவர்கள் சொத்துக்களையும் விடுவிக்குமாறும் அது கேட்டிருக்கிறது.

### தூதர்கள் சந்திப்பு

புதுடில்லி, டிச. 1

கானு, தன்ஸானியா ஹைகமிஷனர்கள் நேற்று இந்திய வெளிநாட்டமைச்சில் திரு. ஸி. எஸ். ஜாவைச் சந்தித்து ரொடீஷியா பற்றிப் பேசினர்.

### மொராக்கோ மன்னர்

பொன், டிச. 1

மொராக்கோ மன்னர் ஹஸ்ஸெய்ன், நேற்று மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் எர் ஹாட்டைச் சந்தித்துப் பேச்சு நடத்தினுர்.

### பாகிஸ்தான் ஊடுருவல்

புதுடில்லி, டிச. 1

பாகிஸ்தானியர் கிழக்கு பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினரின் துணையுடன் அஸ்ஸாமிலும் மேற்கு வங்கத்திலும் ஊடுருவல்செய்ததாயும், ஊடுருவாளர்கள் துப்பாக்கிப்பிரயோகத்தின் மீது விரட்டப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

### ஐ. நா. பிரதிநிதி

நியுயோர்க், டிச. 1

இந்தோ — பாகிஸ்தான் படைகள் வாபஸ்பெறுவது சம்பந்தமாக நியமிக்கப்பட்டிருக்கும் ஐ. நா. பிரதியான பிரிகேடியர் ஜெனரல் மராம்பியோ நேற்று யுதாண்டைச் சந்தித்துப் பேசினுர். உபகண்டம் வருமுன்பு அவர் ஐ. நா. வில் உள்ள இந்திய பாகிஸ்தான் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்பட்டது.

### மாணவர்களே எழுங்கள்

டாக்கா, டிச, 1

மேற்கு பாகிஸ்தான் நசுக்குதலுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கும்படி அஸாத் கிழக்கு பாகிஸ்தான் ரேடியோ மாணவர்களை கேட்டுக்கொண்டிருக்கிறது. டாக்கா பல்கலைக்கழகம் மூடப்பட்டது குறித்து அது கண்டனம் தெரிவித்தது.

### ஹைகமிஷன் சிப்பந்திகள்

பம்பாய், டிச. 1

பாகிஸ்தானிலுள்ள இந்திய ஹைகமிஸன் ஊழியர்களும், அவர்களது குடும்பங்களும் பிரிட்டிஷ் கப்பல் ''டிபோனியா'' வில் நேற்றுப்பகல் இங்கு வந்தனர். பாகிஸ்தா கைப்பற்றிய சரஸ்வதி, ஜல்ராஜேந்திரா ஆகிய கப்பல்களைச் சேர்ந்த 150 ஊழியர்களும் இக்கப்பலில் வந்தனர்.

### நியமனம்

நியுயோர்க், டிச. 1

இளவரசர் சத்ருதீன் ஐ. நா. அகதிகளுக்கான ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விஞ்ஞானம் தமிழில் கற்பிக்கப்பட வேண்டும்"

## யாழ். கல்லூரியில் தெ. பொ. மீ.

வட்டுக்கோட்டை, புதன்
"அன்னியரிடமிருந்து நாம் பெற்ற சுதந்திரம் பூரணமடைய வேண்டுமானால், பொருளாதார ரீதியிலும் அரசியலிலும் நாம் முன்னேற்றமடைந்து உலக அரங்கிலே மேலை நாடுகளுடன் சரிநிகர் சமானமாக முன்னணியில் நிற்க முயற்சிக்கவேண்டும். இந்த இலட்சியத்தை அடைவதற்கு முதலில் விஞ்ஞானம் தமிழில் கற்பிக்கப்படவேண்டும்."

யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழக திராவிட மொழியியற்றுறைத் தலைவர் பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:
"வரலாற்றை உற்று நோக்கும்போது ஒரு சில நூற்றாண்டுகளை உள்ளடக்கிய சரித்திரத்தையுடைய மேலைநாட்டவர், விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறி உலக அரங்கில் முன்னிற்கும்போது, பல்லாயிரக்கணக்கானவருடங்களுக்கு முந்திய பரம்பரையையுடைய நாம் ஏன் முன்னேற முடியாது? விஞ்ஞானத்தை தாய்மொழியில் கற்பித்தால்தான் நாம் கற்ற கல்வி நமது இரத்தத்திலூறி நம்முடையதாகும். இதன்மூலமாகத்தான் நாம் சுயமாகச் சிந்திக்கவும் ஆராய்ச்சிகள் நடத்தவும் நமது அறிவு நமக்குப் பயன்படும். அசுர வேகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இந்த அணுயுகத்தில் நாம் வீண் பழம் பெருமை பேசிக் காலம் கடத்தாது செயல் வீரர்களாக மேலை நாட்டவர்களுடன் போட்டியிட்டு 'நோபல் பரிசு' பெறும் வண்ணம் ஆராய்ச்சிகள் செய்ய முயற்சிக்கவேண்டும். விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் ஆசிரியர்கள், மாணவர்களுடைய மனத்தைக் கலக்கும் வண்ணம் குளறுபடிகள் செய்யாது, இலகுவான நடையிலே இலக்கணம் தப்பாது மொழிபெயர்க்க வேண்டும். தமிழின் வளர்ச்சிக்கு ஒப்புவமையற்ற சேவை செய்த திரு சி. வை, தாமோதரம்பிள்ளை போன்ற பெரியோர்களை யாழ். கல்லூரி உருவாக்கியதை நான் மாணவர்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன். மாணவர்கள் இதை மனத்தில் கொண்டு தமது கல்லூரிக்கும், நாட்டிற்கும் பெருமை தேடித்தரவேண்டும்"

திரு. க. சண்முகதாஸ் நன்றியுரை நிகழ்த்தினார்.

## தபால்பெட்டி மறைந்தது

யாழ்ப்பாணம், வியா.
சென்ற சில மாதங்களாக திறக்கப்பட்ட நிலையில் வல்வெட்டி பொலிஸ் நிலையத்துக்கு முன்னாலிருந்த தபால் பெட்டி இப்போது மாயமாக மறைந்துவிட்டது! வல்வெட்டித்துறை தபால் பகுதியினரை விசாரித்ததில் தாங்கள்தான் அத்தபால் பெட்டியை அகற்றிவிட்டதாகத் தெரிவித்தனர்.

இங்குள்ள பொதுமக்கள் வேறொரு தபால் பெட்டிக்காக அரைமைல் தூரம் நடக்க வேண்டிய கஷ்ட நிலைக்குள்ளாகியிருக்கிறார்கள். இதுபற்றித் தபால் பகுதியினரிடம் அறிவித்தும் இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

## 39-வது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், வியா.
மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய 39-வது ஆண்டு நிறைவு விழா மேற்படி சங்கத் தலைவர் வழக்கறிஞர் திரு. நம. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

அன்றைய விழாவில் நடிகமணி வி. வி. வைரமுத்துவின் "பட்டினத்தார்" பற்றிய சங்கீத கதாப் பிரசங்கம் இடம் பெற்றது. செல்வி யோ. வைரவநாதன் "மங்கையர்க்கரசியார்" என்னும் பொருள் பற்றி விசேட உபந்நியாசம் நிகழ்த்தினார்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாய் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

போஷகர் வைத்தியர் ஐ. பேரம்பலம். தலைவர் வழக்கறிஞர் நம. சிவப்பிரகாசம். உபதலைவர் திரு. இ. சண்முகநாதன். இணைக் காரியதரிசிகள் மூ. வைரவநாதன், த. ஜெயராசா தனாதிகாரி ஐ. கதிரவேலு. 19 அங்கத்தவர்கள் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## சிரமதானம்

வவுனியா, புதன்
புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயிலிலிருந்து நாகேசுவரி வித்தியாசாலைக்கு ஒரு பாதையை சிரமதான முறையில் அமைக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிராமசேவகர் திரு. சி. சு. சின்னத்தம்பியைத் தலைவராகவும், தலைமையாசிரியர் திரு. இ. த. சுப்பிரமணியத்தைச் செயலாளராகவும் கொண்ட சபையொன்று சிரமதான இயக்கத்தை நடத்த பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

கிளிநொச்சி கிராமசபைத் தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி சிரமதானிகளுக்கு வேண்டிய உணவளிக்க நடவடிக்கை எடுத்துவருகிறார். உழவு மெஷின்கள் யாவும் ஒருநாள் இலவச சேவை புரிய ஒழுங்குசெய்யப்பட்டு வருகிறது.

## களைபிடுங்கினர்

கோண்டாவில், புதன்
கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் நேற்றுகாலை கல்லூரி ஆசிரியர்கள் தலைமையில் பட்டு வெளிக்கு ஊர்வலமாகச் சென்று அங்குள்ள வயல்களில் களைபிடுங்கினர். மாணவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் சுறுசுறுப்பாக களைபிடுங்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வைபவத்திற்கு வ பகுதி உதவிவித்தியாதிபதி திரு. [illegible] தலைமை வகித்தார்.

# மனமுடைந்து வாழ்ந்தவர் தீ மூட்டித் தற்கொலை!

யாழ்ப்பாணம், வியா.
உத்தியோகத்திலிருந்து வெளியேறிய பின் நான்கு வருடகாலமாக வேலையின்றி அலைந்து அதனால் மனவேதனை அடைந்து, நிம்மதியின்றி வாழ்நாளைக் கழித்து சிறிதுகாலம் மனநோயால் தாக்குண்டு அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்ற ஒருவர் இறுதியில் தனது உடலில் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று கொக்குவிலில் நடந்துள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த 59 வயதான மயில்வாகனம் நடராசா என்பவரின் மரண விசாரணையின் போது மேற்கண்டவிபரம் தெரியவந்தது யாழ்ப்பாணம் நகரப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் மனைவி ஞானம்மா சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:-

காலஞ்சென்ற எனது கணவர் 62-ம் ஆண்டுமுதல் வேலையின்றி அலைந்துதிரிந்தார். அதற்கு முன் இருந்த உத்தியோகத்திலிருந்து அவர் ராஜினாமாச் செய்துகொண்டார். இதன் காரணமாக அவர் மனநோயால் பாதிக்கப்பட்டு சிறிதுகாலம் அங்கொடை மனநோய்ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் நல்ல நிலையில் இருந்தார். அவர் வீட்டைக் கழுவி, என்னிடம் சமைக்கும்படி கூறினார். நான் சமையல் செய்துகொண்டிருந்தசமயம் படுக்கை அறையிலிருந்து ஒரு சத்தம் கேட்டது. நான் அந்தப்பக்கம் சென்றேன். கதவு பூட்டியிருந்தது. அறையிலிருந்து புகை வெளியில் வந்துகொண்டிருந்தது. நான் எனது கணவனின் பெயரைச் சொல்லிக்கூப்பிட்ட பொழுது அவர் அந்தஅறைக்குள் இருந்து பதிலளித்தார். உடனே நான் உரக்கச் சப்தமிட்டேன். அயலவர்கள் ஓடிவந்து கதவை உடைத்துத் திறந்தார்கள்.

என் கணவனின் உடலில் தீப்பற்றிக்கொண்டிருந்தது. அவருக்குப் பக்கத்தில் ஒரு மண்ணெண்ணைத் தகரம் இருந்தது. 'தானே தனக்குத் தீ மூட்டியதாக' அவர் என்னிடம் கூறினார். சாக்கின் உதவியால் பற்றிய தீயை அணைத்து உடனடியாக ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசென்றோம் அவர்இன்று மரணமானார். நான் இது பற்றி எவரையும் சந்தேகப்படவில்லை.

டாக்டர் எஸ். செல்லத்துரை சாட்சியமளிக்கையில், எரிகாயத்தினால் மரணம் ஏற்பட்டதென்றார்.

தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

REGAL--JAFFNA
NOW SHOWING
Christine Martel
Carlos Baena
IN
ADAM & EVE

ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டரின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக்கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப்பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜஸ்லண்ட் கட்டிடம், தொலைபேசி: 6168
கொழும்பு-3 தந்தி: ஆபீஸ் எகியிப்

6-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு
தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## யாழ்ப்பாண மாநகரசபை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை தனது விருப்பத்திற்கமைய ஒவ்வொரு வருடத்தின் முடிவினும் புதுப்பிக்கவோ அல்லது புதுப்பிக்காமல் விடவோ அதிகாரம்கொண்ட உரிமைக்கிணங்க, 1966ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந் திகதி தொடங்கி மூன்று வருடகாலத்திற்கு பெரியகடை மீன் சந்தைக்கு அருகாமையில் மின்சாரநிலைய வீதியில் 1 தொடக்கம் 8வரை இலக்கமிடப்பட்ட தகரக்கடைகளையும், ஆஸ்பத்திரி வீதியில் 9 தொடக்கம் 20 வரை இலக்கமிடப்பட்ட தகரக்கடைகளையும் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரத்திற்குரிய நிபந்தனைகள்:

1. மேற்படி கடைகளைக் குத்தகைக்குக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் யாவும் 1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி பிற்பகல் 4 மணிவரை யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரப்படிவங்கள் யாவும் 14-12-65ம் திகதி பிற்பகல் 3 மணிவரை ஆணையாளரால் அல்லது இவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் வழங்கப்படும். ஒரு கேள்விப்பத்திரப் படிவத்தின் விலை ரூபா 2-50 ஆகும். கட்டுப்பணமாக ரூபா 25/-ஐ ஒவ்வொரு கேள்விக்காரரும் செலுத்தவேண்டும். கேள்விப்பத்திரப் படிவங்கள் பெறுவதற்கு முன், கட்டுப்பணம் செலுத்தப்பட்டு இதற்குரிய ரசீதைச் சமர்ப்பிக்கவேண்டும்.

3. கேள்விப்பத்திரம் இணைப்பிரதி ஒன்றுடன் சம்பந்தப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப்பத்திரப் படிவத்திலுள்ள சகல கோடுகளும் பூர்த்தியாக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவேண்டும்.

4. எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சபையைச் சேர்ந்தது.

5. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கமுடியும்: இவர் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராயும் இருத்தல்வேண்டும்.

6. ஒவ்வொரு கேள்விக்காரரும் தான் கடையில் வியாபாரத்திற்காக வைக்கப்போகும் பொருட்கள் பற்றியும், சம்பந்தப்பட்ட வியாபாரத்தில் அவர் போடவிருக்கும் முதல் பற்றியும் கேள்விப்பத்திரப் படிவத்தில் குறிப்பிடவேண்டும்.

7. ஒரு மாதத்திற்குரிய வாடகை முதலாம் வருடத்திற்கு சதுரஅடி ஒன்றுக்கு 30 சதவீதமும், 2ம், 3ம் வருடங்களுக்கு சபை நிர்ணயிக்கும் எந்தக் கட்டணத்தையும் செலுத்தவேண்டும் என்றும் கணக்கிடப்படும்.

8. குத்தகை பெற்றவர், 1966ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதிக்கு முன் மூன்றுமாத வாடகையை முற்பணமாகச் செலுத்தவேண்டும். இத்தொகை ஒவ்வொரு வருடத்திலும், குத்தகை முடியும் கடைசி மூன்று மாதகால வாடகையாகக் கணக்கிடப்படும்.

9. குத்தகை பெற்றவர் யாழ்ப்பாண மாநகரசபையுடன் ஒப்பந்தம் அல்லது குத்தகை உடன்படிக்கை ஒன்று எழுதவேண்டி நேரிடும்.

10. குத்தகை பெற்றவர் ஒவ்வொரு மாதத்தின் வாடகையையும் அந்தந்த மாதம் 14ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தவேண்டும். சம்பந்தப்பட்டவர் இதைச் செலுத்தத் தவறினால் குறிப்பிட்ட தொகையில் 10% குற்றப்பணம் செலுத்தவேண்டி நேரிடும்.

11. குத்தகை பெற்றவர், குத்தகை நீடிக்கும் காலம்வரை குறிப்பிட்ட வாடகையை முன்பு கூறப்பட்ட நாட்களில் செலுத்துவதுமல்லாமல் சம்பந்தப்பட்ட இடத்தைத் துப்புரவாகவும், நேர்த்தியான நிலையிலும் வைத்திருத்தல்வேண்டும். அத்துடன் சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களைக் குறிப்பிட்ட இடத்தினுள் புகுந்து பார்வையிடுவதற்கு அனுமதிப்பதற்கும், குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் அமைதியான முறையில் கடையை விட்டுச்செல்வதற்கும் கடமைப்பட்டுள்ளார்.

12. குத்தகை பெற்றவர் குத்தகையுரிமையை வேறொருவருக்கு மாற்றவோ அல்லது உப வாடகைக்குக் கொடுக்கவோமுடியாது. குத்தகை எடுத்தவர் சபையின் உப விதிகள் அடங்கியுள்ள பிரமாணங்களுக்கு இணங்க நடப்பதுமட்டுமல்லாமல் சபையினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சட்டபூர்வமான கட்டளைகளையும் ஏற்றும்நடத்தல்வேண்டும்.

13. ஒரு மாதகால அறிவித்தலின் பின், எதுவித காரணமும் காட்டாமல் குத்தகையை நிறுத்துவதற்கு யாழ்ப்பாண மாநகரசபைக்கு உரிமையுண்டு.

14. குத்தகை பெற்றவர், தனது கடையில் வேலை பார்க்கும் ஊழியர்களின் பெயர்களைச் சபையின் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.

15. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்வதற்குச் சபை கட்டுப்பட்டிருக்கவில்லை. கேள்விப்பத்திரங்கள் முழுவதையும் அல்லது தனித்தனியாகவும் எதுவித காரணமுமின்றி நிராகரிக்கும் உரிமை சபையைச் சேர்ந்தது.

16. மேலும் இதுபற்றிய விரிவான தகவல்கள் பெறவேண்டுமென்றால் கீழே ஒப்பமிட்டிருப்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளருக்காக
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29-11-65. 1286

## நாவாந்துறை சென். மேரிஸ் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்
நாவாந்துறைச் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் குருநகர் புனித வளன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சினேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறைச் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் முதலில் நாவாந்துறைச் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமே முதலாவது கோலை போட்டது. இக்கோஷ்டியின் முன்னணி வீரரான சூ. அமிர்தநாதர் பின்னணி வீரர் ம. அருமைராசாவின் உதவியுடன் மிகவும் சாதுர்யமாக ஒருகோலைப் போட்டார்.

இதைத் தொடர்ந்து புனிதவளன் முன்னணி வீரர் ஆரோக்கியநாதர் மிக உற்சாகமாக விளையாடி ஒரு கோலைப்போட்டார்.

இடைவேளைக்குப் பின்பு சென். மேரிஸ் கோஷ்டிக்கு உற்சாகம் காணப்பட்டது. புனிதவளன் கோல் காப்பாளர் கிறவுதருக்கு அடிக்கடி வேலை கொடுத்துக் கொண்டே இருந்தனர். சென். மேரிஸ் முன்னணி வீரர் செ. யோ. வீரசிங்கம் மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார்.

போட்டி முடிவில் சென். மேரிஸ் கோஷ்டி 2—1 கோல்களால் புனிதவளன் கோஷ்டியைத் தோற்கடித்தது. ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. நீக்கிலாப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

## வெற்றிதோல்வி இல்லை

சுழிபுரம், புதன்
வடபகுதி கல்வி இலாகாக் கந்தோர் உத்தியோகத்தர்களுக்கும் சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக்கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் இருபகுதியினரும் தலா ஒரு கோல் போட்டி போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. போட்டி சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. மத்தியஸ்தராக திரு. எஸ். சண்முகதாஸ் கடமையாற்றினார்.

## ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம்

திருகோணமலை, புதன்
திருக்கோணமலைமாவட்ட அரசினர் அசிரியர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் 'திருக்கோணமலை மாவட்ட அரசினர் ஆசிரியர்சங்கம்' என்றபெயரில் புதியதோர் தொழிற் சங்கம் தற்காலிக தலைவர் திரு. க. கனகசுந்தரம் தலைமையில் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, மூதூர்த் தொகுதிகளில் உள்ள பல ஆசிரிய ஆசிரியைகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். கிழக்கிலங்கை சுயபாஷை அரசினர் ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் திரு. சி. நடராசா பேசுகையில் திருமலை மாவட்டத்திற்கென தனித்த தொழிற்சங்கம் முக்கியம்என்பதை வலியுறுத்தினர்.

திருகோணமலைக் கிளைச் சங்கச் செயலாளர் திரு ஐ. துரைராஜசிங்கம் பேசுகையில், திருகோணமலை மாவட்டம் கடந்த பல ஆண்டுகளாக தண்டனை பெறும் ஆசிரியர்கள்மாற்றம்பெறும் பகுதியாகவும் கல்வியில் பின்தங்கிய பகுதியாகவும் இருந்துவருகிறதெனக் கூறினார்.

புதிய நிர்வாகிகள்: தலைவர்: கி. நடராசா, உபதலைவர்: ம. இ. குரூஸ், த. சீனிவாசகம், செயலாளர்: ஐ. துரைராஜசிங்கம், உபசெயலாளர்: செ. கதிர்காமத்தம்பி, பொருளாளர்: க. கனகசுந்தரம்.

## 'புதுபயிர் செய்கையில் வெற்றி கண்டோம்'

இணுவில், திங்கள்
''விவசாயிகள் வருங்காலத்தில் கறுப்புப் புகையிலையைமட்டும் நம்பியிருக்காது புதுப்பயிர்ச் செய்கையில் ஈடுபடல் வேண்டும். குறிப்பாக பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு, பீடிப்புகையிலைசிகரெட் புகையிலைபோன்ற புதுப்பயிர்களையும் உற்த்தி பண்ணவேண்டும்செயற்கைப் பசளையிடுவதால் மண் கெட்டுவிடுமென்ற மூட நம்பிக்கை நீண்டகாலமாக நிலவி வந்திருக்கிறது. இவ் அவநம்பிக்கையை போக்கும்முகமாக கடந்தவருடம் எமது கழக உறுப்பினர்கள் உருளைக்கிழங்குச் செய்கையிலும் பம்பாய் வெங்காயச் செய்கையிலும் ஈடுபட்டு பெரும்வெற்றிகண்டு அறுவடை விழாவொன்றை நடத்தினார்கள். இப்புதுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு இளம்விவசாயிகளாகியநாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்''

இவ்வாறுஇணுவில் ஜோதி இளைஞர் விவசாயக் கழகத் தலைவர் திரு.பெ. கனகசபாபதி புதுப் பயிர்ச்செய்கைப் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப்பேசுகையில் குறிபிட்டார்.

இணுவில் விவசாயிகள்கழகத்தலைவர் திரு. கே. எஸ். ஆனந்தன், வலி-வடக்கு கி.மு.ச.சமாஜச்செயலாளர் திரு.தி. சி. சண்முகலிங்கம் திரு.வ. சி. நடராசா ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினர்.

## ஆசிய பவுண்டேஷன் தலைவர் விஜயம்

பம்பலப்பிட்டி, புதன்
ஆசிய பவுண்டேஷன் தலைவர் டாக்டர் ஹெய்டன் வில்லியம்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார், இவர் இலங்கையில் நான்கு நாட்கள் தங்கியிருப்பார் இவர், பிரதமர், கவர்னர் ஜெனரல் மற்றும் மந்திரிகள் ஆகியோரைச் சந்திப்பார். டாக்டர் வில்லியம்ஸுடன் ஆசிய பவுண்டேஷன் ஸ்தாபனத்தின் தர்மகர்த்தா திரு. மொர்டிமர் பிலெஷ்ஹாக்கரும் விஜயம் செய்துள்ளார். தம்பதிகள் சகிதமாக விஜயம் செய்துள்ளஇவர்கள் ஆசிய பவுண்டேஷன்உதவிபெற்றுள்ள ஸ்தாபனங்களையும் சென்று பார்வையிடுவர்.

## விவசாய அழகி போட்டி

அக்கரைப்பற்று, புதன்
அழகு ராணிப் போட்டி போன்று விவசாய அழகியையும் விவசாய அழகனையும் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் இங்கே நடைபெற்று வருகின்றன' 12வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

## டிரிபியூன் வரவேற்பு

நியுயோர்க், டிச.1
இந்திய — பாகிஸ்தானுக்கிடையே சமரசம் செய்துவைக்க ரஷ்யா மேற்கொண்டுள்ள முயற்சியை நியூயோர்க் ஹெரால்ட் டிரிபியூன் பத்திரிகை வரவேற்றது.

சமரசம் செய்துவைக்கும் இப்பிரச்னையில் அமெரிக்காவைவிட ரஷ்யா மேலான நிலையில் இருக்கிறது என அறியப்படுகிறது.

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கொடிகாமம் சந்தைக்கு அருகாமையில், பருத்தித்துறை வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ரி. இராமநாதன், கண்டிரோட், கொடிகாமம். 1437

### கல்வி


வடபிரதேசப் பல்கலைக் கல்விக் கழகத்தால் நடாத்தப்படும் G.A.Q., G.S.Q, B. A., B Sc விடுமுறைகால வகுப்புகள் 6-12-65 இல் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். 1966, 67-ம் ஆண்டு நடைபெறும் G.C.E (O/L- A/L First, Second years Seiencc & Arts) பரீட்சைக்குரிய வகுப்புகள் 1-1-66ல் ஆரம்பமாகும். டிசம்பர் 25 க்கு முன் மனுச்செய்க. கௌரவ பதிவாளர், இந்துக் கல்லூரி அல்லது நமசிவாய வித்தியாலயம், யாழ்ப்பாணம். 1438

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## 'மது அருந்தும் ஆசிரியர்கள்'

மாரவில, புதன்
''நல்ல ஆசிரியர்களை இன்று காண்பது கஷ்டமாக இருக்கிறது. இவர்களில் சிலர் தங்கள் புனிதமான கடமைகளை முற்காலங்களில் செய்தது போன்று இப்போது செய்வதில்லை. என்னிடம் இடமாற்றம் கோரிவரும் சில ஆசிரியர்களிடம் காலையிலேயே குடிவகை மணம் வீசுகின்றது, என்று சபாநாயகர் சேர் அல்பேர்ட் பீரிஸ் மாரவில கத்தோலிக்க அரசினர் பாடசாலையில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.




## கொழும்பு
### வியாழன் 2-12-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 விமர்சனம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வயலின், 9-30 நேயர் விருப்பம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட தமிழ் பாடசாலைகள்

## மீண்டும் திறப்பது குறித்து ஆராய ஜே. ஆர். தலைமையில் கமிட்டி

### தமிழ் போதனு வகுப்புகளை ஆரம்பிப்பது குறித்தும் பரிசீலிக்கும்

கொழும்பு, செவ்வாய்

மூடப்பட்ட தமிழ்ப்பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்தும் பல பாடசாலைகளிலும் தமிழ்ப் போதனு வகுப்புகளை ஆரம்பிப்பது பற்றியும் ஆராயும் பொருட்டு ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு தலைமையில் ஒன்பது பேர் கொண்ட கமிட்டி யொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழு இன்று கூடிய பொழுது கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம்; மூடப்பட்ட தமிழ்ப் பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து ஆராய கமிட்டி ஒன்று நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

1956-ம் ஆண்டு முதல் 1965-ம் ஆண்டுவரை பல தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவென்றும் கொழும்பிலுள்ள தமிழ்ப் பிள்ளைகள் தங்களது தாய் மொழியைக்கூட கற்க கதியற்று நிற்கிருர்களென்றும் தெரிவித்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் இவை யாவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பழிவாங்கும் நோக்கமே என்றும் சுட்டிக் காட்டினுர்.

இவை யாவற்றையும் தீர்க்கமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து மீண்டும் இப்பாடசாலைகளைத் திறக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படவேண்டுமென்று இவர் கோரினுர். கிளிநொச்சி எம். பி.யின் பிரேரணையை அரசாங்க பார்லிமெண்டரிக் குழு ஏற்றுக்கொண்டது.

இதுசம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியினர் வருமாறு;-

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு (தலைவர்), திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், சர். ராஸிக் பரீத், திரு. ஏ. ஸி. எஸ். ஹமீட், திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா, திரு பி. ஏ. வீரக்கோன், செனட்டர் கல்பகே, திரு. எம். சிவசிதம்பரம், பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

## 5 லட்சம் வசூல்

கொழும்பு, செவ்வாய்

கடந்த சில தினங்களாக வருமானவரி இலாகா சுமார் 5 லட்சம் ரூபா வரியாக வசூலித்துள்ளது.

வருமானவரி இலாகா கமிஷனர் திரு. எஸ். சிற்றம்பலம், சில வியாபாரிகளும் வர்த்தகர்களும் பதுக்கலுக்கு எதிராக நடைபெற்ற பெரும் போராட்டத்தைத் தொடர்ந்து இப்பணத்தைச் செலுத்தியுள்ளார்கள் என்று தெரிவித்தார்.

## 6 லட்சம் மாணவர் களை பிடுங்கினர்

கொழும்பு, செவ்.

பாடசாலை மாணவர்கள் இத்தவணையில் 19,000 ஏக்கர் வயலில் களைபிடுங்கியுள்ளனர். சுமார் ஆறுலட்சத்திற்கு அதிகமான பாடசாலை மாணவர்கள் களை பிடுங்கும்இயக்கத்தில் பங்கு பற்றினர்.

## பெற்ருேர்-ஆசிரியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பெற்ருேர்-ஆசிரியர் சங்க வருடாந்த விழா சென்ற வார இறுதியில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி அதிபர் திருமதி வி. ஆறுமுகம் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பேசுகையில் கல்லூரி வளர்ச்சிக்கு பெற்ருேர் - ஆசிரியர் சங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம் எனக் குறிப்பிட்டார்.

யாழ். இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. ஸி. சபாரத்தினமும் பேசினுர். திரு. ஸி. முருகரத்தினம் பேசுகையில் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர்களின் பற்ருக்குறைபற்றிக் குறிப்பிட்டரர். கல்லூரி மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தனுதிகாரி:- செல்வி பி. இராமநாதன்.

நான்குபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (ந. நி.)

---

வல்வெட்டித்துறை, செவ்,

வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையத்தில்கடமையாற்றிவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 8 பொலிஸார் வெளிமாகாணங்களுக்கு ஜனவரி மாதம் முதல் தேதி தொடக்கம் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர். இன்ஸ்பெக்டரின் அதேயிடத்துக்கு சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஐ. சி. பத்திரானு நியமிக்கப்பட்டுள்ளார்.

## பொங்கலன்று நாவலர் முத்திரை?

கொழும்பு, செவ்.

தைப்பொங்கல் தினத்தன்று நாவலர் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படும் எனத் தெரியவருகிற[illegible].

இது சம்பந்தமான அங்கீகாரத்தை அரசாங்க பார்லிமெண்டரிக் குழு இன்று மந்திரிக்கு வழங்கியுள்ளது. இப்பிரேரணையை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கொண்டுவந்திருந்தார்.

## கோரிக்கைகளுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளைக் கூட்டம் திரு. மா. ஐயன்னு தலைமையில் நடைபெற்றது.

சிறு சேவையாளரின் வருமானம் குறைந்திருப்பதால் அந்த சௌக்கிய அத்தியட்சகர் மாவட்டத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யவேண்டுமெனக் தலைமையுரையில் திரு. மா. ஐயன்னு கேட்டுக்கொண்டார்.

யாழ். கிளை அரசாங்க லிகிதர் சங்கக் காரியதரிசி திரு. எஸ். இரத்னசபாபதி பேசுகையில், சிறு சேவையாளர்களின் கோரிக்கைகளுக்கு தாம் முழு ஆதரவையும் தருவோமென்று சொன்னுர்.

இலங்கை தொழிலாளர் சங்கப் பிரதிநிதி திரு. எஸ். நடராசா பேசுகையில், சிறு சேவைத் தொழிலாளர்களின் இடமாற்றம் நியாயமற்றதென்றும், தமது சங்கம் பூரண ஆதரவைத் தருமென்றும் கூறினுர்.

பல சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ந. நி.)

## வேலைநிறுத்தம் நீடிக்கிறது

களனி, புதன்

அரசாங்க என்ஜினியரிங் கார்ப்பரேஷனைச் சேர்ந்த 1200 தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் இன்றுடன் ஆருவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. களனியிலுள்ள தமது டயர் தொழிற்சாலைக்கு முன்னுல் இவ்வேலைநிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விவாக அந்தியகால சங்கத்தின

## ஏமாற்றியதாக வழக்கு: கோர்ட்டில் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தனது மக்களின் எதிர்காலம் சீருடனும் சிறப்புடனும்இருக்கவேண்டுமென்று கருதி ஒருவிவாக, விவாக அந்தியகாலச் சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து மாதந்தோறும் பணங் கட்டிய ஒரு பெண், ஏமாந்து கோட்டில் வழக்குத் தொடர்ந்த சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

மீசாலைவடக்கைச் சேர்ந்த கற்பகம் (45 வயது) என்பவரை ஏமாற்றியதாக எஸ். அருமைநாயகம், எஸ். நடராசா ஆகிய இருவர்மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் ரி. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபொழுது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

கற்பகம்சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“இந்த இரு எதிரிகளையும் எனக்குத் தெரியும். இவர்கள் விவாக அந்தியகால சங்கத்தை நடாத்தினுர்கள். நான் இந்தச்சங்கத்தின் அங்கத்தவர். எனது மகள் செல்லாச்சியின் பெயரில் பணம் செலுத்திவந்தேன். எனக்கு ஒரு ‘பாஸ்’ புத்தகம் கொடுக்கப்பட்டிருந்தது. சிலநாட்களின்பின் எனது மகளுக்குபதிவுத் திருமணம் நடைபெற்றபின் பதிவுத் திருமண அத்தாட்சிப் பத்திரத்தை இச்சங்கத்தில் ஒப்படைத்து எனக்குச் சேர வேண்டிய பணத் தொகையைத் தரும்படி கேட்டேன். தவணைகொடுத்து வந்தார்களேதவிர எனக்குப் பணம் தரவில்லை. பல தடவைகள் ஏமார்தபின்னர் இறுதியாக நான் அங்கு சென்றபொழுது எதிரிகள் இருவரும் அங்கு இல்லை. ஆனல் சங்கக் காரியாலயத்தில் வேறு ஒரு பெண்மணி இருந்தார். நான் விசாரித்தபோது எதிரிகளையோ அல்லது பணம் சம்பந்தமாகவோ தமக்கொன்றும்தெரியாதென்று சொல்லி என்னைத் திருப்பி அனுப்பி விட்டார்”.

முதலாவது எதிரிசார்பில் அட்வகேட் ரீ. கணேசலிங்கம் புறக்டர் அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். இரண்டாவது எதிரிசார்பில் புறக்டர் எஸ். நடராஜா ஆஜரானுர். மேல் விசாரணை அடுத்த வருடம் ஜனவரிமாதம் 5-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

## வல்லிபுர ஆலய நிர்வாகசபை

பருத்தித்துறை, புதன்

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய நிர்வாகம்பற்றி விசாரணை செய்த கமிஷன் ஆலய நிர்வாகத்திற்கு ஏழுபேர் கொண்ட சபையொன்றைத் தெரிவுசெய்துள்ளது.

திருவாளர்கள் ம. செல்லத்துரை, மு. காசிநாதர், பு. நாகலிங்கம், ச. மெய்கண்டதேவர், வே. பொன்னையா, இ. செல்லத்துரை, மு. சதானந்தன் ஆகிய எழுவர்கொண்ட சபை நேற்றையதினம் ஆலயத்தில்கூடி சபையின் தலைவராக தற்போதைய மனேஜர் திரு. ம. செல்லத்துரையையும், செயலாளராக திரு. இ. செல்லத்துரையையும் தெரிவு செய்தது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் இது எப்படியாயினும், நாம் அதுவரை காத்திராமல், இந்தக் கூடாத பழக்கத்தை கடவுள் அருளால் கைவிட முடியுமாயின் நமக்கு நாமே நல்லது செய்துகொண்டவர்களாவோம்.

சட்டவிரோதமாக வந்தவரொருவரை வீட்டில் வேலைக்கு வைத்துக்கொண்டதற்காக கண்டியில் ஒருவருக்கு 2 வருட கடுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. உஷார்!

ஃ ஃ ஃ

இந்தியாவுக்குச் செல்ல இலங்கையருக்கு உள்ள தடை இன்னும் நீக்கப்படவில்லை என்றும் ஜன்மத்துக்கு ஒருமுறைதான் பக்கத்திலுள்ள சிதம்பரத்துக்கும் செல்லமுடியுமென்று அதிகாரிகள் கூறுவதாயும் கொழும்பிலிருந்து திரும்பிய ஓர்அன்பர் மிக ஏமாற்றத்துடன் கூறுகிருர். இவ்விஷயத்தில் செலாவணி நஷ்டம் எதுவுமில்லையாதலால், இந்த அநியாயத் தடையை நீக்க நமது எம். பி. மார்களும், பிரதம மந்திரியும் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

ஃ ஃ ஃ

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ, மண்ணினுர் வலஞ் செய்ம்மறைக் காடரோ, கண்ணினுலுமைக் காணக் கதவினைத், திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

— அப்பர் அடிகள்

## கலட்டி வீதியில். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காகிதத்துக்குள் இருந்த சிறுபடத்தை கண்டெடுத்தவர் யாழ்ப்பாணத்திலுள்ளஒரு புகைப்படஸ்ரூடியோவில் சேர்த்திருந்தாராம். இந்த ஸ்ரூடியோ மனேஜர் ஒரு தியேட்டரிலுள்ள திரு. நடராசாவின் உறவினரிடம்விஷயத்தை தெரிவித்தபினனர் அவர் தமது மகளுக்கு அனுப்பிய காகிதங்களையும் படத்தையும் பெற்ருராம்.

நீலப்பெட்டியில் இங்கிலாந்து விலாசமிடப்பட்டுப்போடப்பட்ட விமானத்தபால் எவ்விதம் கலட்டிவீதிக்கு சென்றது என்பதுபற்றி அறிய ஆர்வம்கொண்டுள்ள இவர், தபால் பகுதி உயர்அதிகாரிகளுக்கு இதுபற்றி அறிவித்துள்ளாராம்,

## கடும் காற்றுடன். .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படலாமெனக் கருதப்படுகிறது.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஊர்காவற்றுறை, காரைநகர், மானிப்பாய், சுன்னுகம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களுக் கிடையிலான தொலைபேசித் தொடர்புகளும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, மட்டக்களப்பு, அனுராதபுரம், மன்னுர், பரந்தன் ஆகிய இடங்களுக்குமான தொலைபேசித் தொடர்புகளும் நேற்று முற்பகலில் துண்டிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org